REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: தை 20உ. சனி (2—2—57) ★ ★ வெளியீடு: தை 21உ ஞாயிறு (3—2—57) [இதழ் 203

கே. வி. கே. சாமி கொலை வழக்கு

பிப். 8-ந்தேதி தீர்ப்பு

நெல்லை, பிப். 1—

தோழர் கே. வி. கே. சாமி கொலைவழக்கு விசாரணை, நேற்று மாலை முடிவுற்றிருக்கிறது. இருதரப்பினரும் தேற்றுடன் தங்கள் வாதங்களை முடித்துக் கொண்டுள்ளனர்.

வரும் பிப்ரவரி 8-ந்தேதி தீர்ப்பு வழங்கப்படும் என்று நீதிபதி அறிவித்திருக்கிறார்.

விடுதலை கோரும் மக்கள் மீது குண்டுமாரி

கிழக்கு சுமத்திராமீது இந்தோனேஷிய சர்க்கார் போர்பிரகடனம்

விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டு 17 பேரைக் கொன்றன

சுகர்ணோவை வரவேற்க மத்திய சுமத்திரா மறுக்கிறது

ஜகார்தா, பிப். 1—

விடுதலை கோரி எழுந்துநிற்கும் சுமத்திரா மக்கள் மீது ஜகார்தா சர்க்கார் யுத்தப் பிரகடனம் செய்திருக்கிறார்கள்.

எண்ணெய் வளம் மிக்க கிழக்கு சுமத்திராவின் பகுதிகளில் இந்தோனேஷிய விமானப் படையினர் குண்டு மாரிபொழிந்து 17 பேர்களைக் கொன்று குவித்ததாக, மெடான் எனும் இடத்திலிருந்து வெளிவரும் தேசிய பத்திரிகையான 'வாஸ்பாதா' தெரிவித்திருக்கிறது.

மத்திய ஆட்சிப் பிடியிலிருந்து விடுதலைகோரும் மூன்று மாநிலங்களில், மத்திய சுமத்திரா முன்னணியில் நிற்கிறது. இந்த மாநிலத்தில், விடுதலைக் கிளர்ச்சிக்காரர்கள், மாநில ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது அறிந்ததே!

இங்கு சுகர்ணோவை வரவேற்று, அவர் என்ன கூறவிருக்கிறார் என்று அறியலாம் எனக் கூறப்பட்ட யோசனையை மாநில சர்க்கார் ஏற்க மறுத்துவிட்டிருக்கிறது.

இதற்குக் காரணமாக, மூன்று சர்க்கார் தூதுக் குழுக்கள் வந்துபோன பின்பும், சுமத்திரா மக்களின் அபிலாஷைகளை மத்திய சர்க்கார் புரிந்துகொள்ளத் தவறிவிட்டதுதான் என்றும் கூறப்படுகிறது.

தீவிர நாகர்கள் மீது யுத்தப் பிரகடனம்

விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க மிருகத்தனமான நடவடிக்கை

ஷில்லாங், ஜன. 31—

நாகமலைப் பிரதேசத்தை, 'கலகம்' மூண்டுள்ள பிரதேசம் என்று அசாம் மாநில கவர்னர் பிரகடனம் வெளியிட்டிருக்கிறாம்.

இந்தப் பிரதேசத்தில், நாகர்கள் ஆயுதந்தாங்கி, கொள்ளை, கொலை முதலிய அட்டூழியங்களில் ஈடுபடுவதாகவும், இந்த பலாத்காரச் செயல்களை ஒடுக்குவதற்கு போலீசாருக்கும் இராணுவத்தினருக்கும் விசேட அதிகாரம் வழங்குவதற்காகவே பிரகடனம் வெளியிடப்பட்டிருப்பதாகவும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

டில்லி ஆட்சியிலிருந்து சுதந்திரம் கோரும் நாகர்களில் தீவிரவாதிகளாயிருப்போர், சர்க்காருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து ஆயுதந்தாங்கிய தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களது கோரிக்கையைக் காது கொடுத்துக் கேட்க மறுத்துவிட்டு, கண்மூடித்தனமான வகையில் இராணுவத்தை ஏவி, அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறது டில்லி.

வலிமை மிகுந்த டில்லியின் இராணுவம், கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக இந்த அடக்குமுறையில் ஈடுபட்டிருந்தும், நாகர்களை ஒடுக்க முடியவில்லை என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

பர்மா-சீன எல்லைத் தகராறு

3 கிராமங்களை சீனவுக்குத் தந்துவிட முடிவு

இரங்கூன், பிப் 1—

இந்தத் திங்கள் இறுதியில் சீனப்பிரதமர் சௌ-என்-லாயும், பர்மியப் பிரதமர் யூ-பா-சாவும் கையெழுத்திடவிருக்கும் ஒரு ஒப்பந்தப்படி பர்மா, தனது வடக்குப் பகுதியில் மூன்று கிராமங்களை சீன சர்க்காருக்கு ஒப்படைத்துவிடும்.

பர்மா சீனவிடம் ஒப்படைக்கும் இந்தப் பகுதி சுமார் 500 சதுர மைல் பரப்புடையது என்றும், 5,000 மக்களே அங்கு வசிக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே நிலவிவரும் எல்லைத் தகராறுக்கு ஒரு முடிவு கட்டும்.

இந்த முடிவை பர்மிய மக்கள் சபை அங்கீகரித்தாகவேண்டும்.

ஒப்பந்தத்தில் கையெழுத்திடு முன் சீனப் பிரதமர் சௌ-என்-லாய், வடக்கு பர்மாவில் காச்சின் ராஜ்ய எல்லைப்புறங்களைப் பார்வையிடுவார் என்றும் கூறப்படுகிறது.

பீகார் சர்க்கார் 'பணிகிறது'

ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு தரச் சம்மதம்

பாட்னா, பிப். 1—

நடைமுறை நிதி ஆண்டுக்குள்ளாக, மாநிலத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பள உயர்வு நிர்ணயிக்கப்பட்டுவிடும் என்று பீகார் மாநில சர்க்கார் அறிக்கை விடுத்திருக்கிறது.

வரும் 7-ந் தேதியிலிருந்து, தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அந்த ஆசிரியர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இப்போது சர்க்கார் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என்றும் சம்பள உயர்வு நிர்ணயிப்பதாகவும் அறிக்கை விடுத்திருக்கிறது

காங்கிரஸ் ஆட்சிமீது வளர்ந்துவரும் வெறுப்பு

இரயில் நிலைய ஊழியர்கள் 'சம்பளம் வாங்கா' போராட்டம் நடத்துகின்றனர்

சென்னை, பிப். 1—

சென்னை சென்ட்ரல், மற்றும் எழும்பூர் இரயில் நிலையங்களைச் சேர்ந்த 10 உதவி ஸ்டேஷன—மாஸ்டர்களும், மற்றும் தமிழக மெக்கணுமுள்ள பல்வேறு இரயில் நிலைய ஸ்டேஷன் மாஸ்டர்களும், இரயில்வே நிர்வாகம தங்கள் கோரிக்கைகள் குறித்த கவலைப்படாமல்—கவனம் ஏதும் செலுத்தாமலிருக்கும் அலட்சியப் போக்கைக் கண்டிக்கும் வகையில் இன்று தங்கள் சம்பளத்தை வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டிருக்கின்றனர்.

பெரிய சூரிய உலை!

ஒரு மிகப்பெரிய சூரிய அடுப்பை (உலையை) அமெரிக்கப்படை உருவாக்குமாம்.

மொரார்ஜி தேசாய் சந்திக்கும் கடும் எதிர்ப்பு

கல்லெறிக்காளாகி காயம்பட்டார்

பொதுக்கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி

பரோடா, பிப். 1—

சம்யுக்த மராட்டியம் கிடையாது; மகாகுஜராத் கிடையாது,' என்ற மொழிவழி மாநிலக் கோரிக்கையை நிராகரித்த மொரார்ஜிதேசாய், கோத்ரா எனுமிடத்தில் கூட்டம் ஒன்றில் பேசிக்கொண்டிருக்கும்போது, ஆத்திரம்கொண்ட மக்கள் கூட்டம் கல்லெறிந்து தாக்கி, அவருக்குச் சிறு காயங்களை உண்டுபண்ணியதாம்.

அவர் கூட்டத்தை முடித்து காரில் புறப்பட்டபோது, கூட்டத்தவர் கல்லெறித் தாக்குதல் நடத்தி, காரின் கண்ணாடிக் கதவுகளை உடைத்தனராம்.

பொதுத் தேர்தல்: இரண்டாம் கட்டம் துவக்கம்

அண்ணு நியமனப் பத்திரம் ஏற்கப்பட்டது

கழக அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் எதுவும் நிராகரிக்கப்படவில்லை

சென்னை, பிப். 1—

பொதுத் தேர்தலின் இரண்டாவது கட்டமாக நியமனப் பத்திரங்கள் இன்று, தமிழ் நாடெங்கிலும் தேர்தல் அதிகாரிகளால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சென்னை நகரில், நகரசபைக் கமிஷனரும் தேர்தல் அதிகாரியுமான டி. பாலசுந்தரம் அவர்கள் நியமனப் பத்திரங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டார்.

இதுவரை அறிவிக்கப்பட்டுள்ள பரிசீலனை முடிவுகளின்படி, நமது கழக அபேட்சகர் எவருடைய அபேட்சாபத்திரமும் நிராகரிக்கப்படவில்லை.

காஞ்சி தொகுதியில் போட்டியிடும் அண்ணு அவர்களின் நியமனப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது

சென்னை நகரில் போட்டியிடும் நமது கழக அபேட்சகர்கள் அனைவருடைய நியமனப்பத்திரங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன.

தொகுதிவாரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நியமனப் பத்திரங்களின் பட்டியல், அடுத்து, பிரதம தேர்தல் அதிகாரியால் வெளியிடப்படவிருக்கிறது.

வட்டி உயருகிறது

தகுதிபெற்ற ஆதாரங்கள்மீது ரிசர்வ் பாங்கி தரும் கடன்களுக்கு வட்டி 3½ சதவிகிதத்திலிருந்து 4சதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது

வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறதா?

சென்னை நகரில் வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதிருந்தாலோ, தவறுதலாக இருந்தாலோ, விட்டுப்போயிருந்தாலோ இப்போதும் பெயரைப் பதிவு செய்து கொள்ளச் சந்தர்ப்பம் இருக்கிறது.

தங்களை வாக்காளர்களாகச் சேர்த்துக்கொள்ள, சம்பந்தப்பட்ட மனுப் பத்திரங்கள், சென்னை நகரசபை ரெவினியூ அதிகாரியிடமும் சென்னை பிரதம வாக்காளர் பதிவு அதிகாரியிடமும் கிடைக்கும்,

அந்த மனுவுடன் ரூ. 5 கட்டணம் செலுத்தி, 'பிரதம வாக்காளர் பதிவு அதிகாரி, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை,' என்ற முகவரிக்கு அனுப்பிவைத்துவிட வேண்டும்.

குறிப்பு:— சென்னை மாவட்டத்தில் உள்ள தி. மு. கழகக் கிளைகள் இதைப் பயன்படுத்திக்கொண்டு, விடுபட்டுப் போயிருக்கும் பொதுமக்களை மேலும் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்வதில் தீவிரப்படுத்தவும்.

செங்கற்பட்டு மக்கள் சபை தொகுதி

செங்கற்பட்டு மக்கள் சபை இரட்டை உறுப்பினர் தொகுதிக்கு டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி (பொது) என். சிவராஜ் (தனி) ஆகியோர் தி. மு. கழக ஆதரவுபெற்ற அபேட்சகர்களாகப் போட்டியிடுகின்றனர்.

தலைமைக் கழகம் (தி. மு. க.)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—2—'57 சனி

வரலாறு திரும்பும்!

"நாம் பிரிவினை மனப்போக்கிற்கு இடமளித்து வந்திருக்கின்றோம் என்று நமது வரலாறு கூறுகிறது.

"நீண்ட நெடுங்காலமாக இந்திய மக்களோடு இப்பிரிவினை மனப்போக்கு, இயல்பானதாகவே இருந்து வந்திருக்கிறது

'பிரிட்டிஷ் ஆட்சியின் ஒரே ஒரு நல்ல செயல்—அதனை எதிர்த்துப் போரிடுவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபடுமாறு அது நிர்ப்பந்தம் செய்ததுதான. பிரிட்டிஷ் ஆட்சியே, தனக்கு எதிராகப் போராட நம்மிடை ஒற்றுமையை உருவாக்கிற்று.

"ஆனல் உண்மையில் இந்த இந்தியாவின் ஒற்றுமையை விரிவான பலனுள்ள முறையில் உருவாகக முதனமுதலாக முயற்சித்தவர் காந்தியார் தான். ஆனலும், நாம் எத்தனை சீக்கிரம பல பிரிவினர்களாகி வருகிறோம் என நீங்கள் காணப் போகிறீர்கள்.

"இந்த மாநிலப் புனரமைப்பு விவகாரத்தைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன்—ஒரு முடிவு சரியானதோ தவறுனதோ, அதறகாக மக்கள கொள்ளை, கொலை நடத்துவதும், மண்டையை உடைத்துக் கொள்ளுவதும் விபரீதமானதல்லவா?

"இது நம்மிடமுள்ள இயல்பான பலவினத்தைக் காட்டவில்லையா?"

சென்னை முதலமைச்சர் காமராசர் போன்று, அரசியல் சூழ்நிலையின் காரணமாக முதலமைச்சர் பதவியிலிருப்பவரா, இந்தியப் பிரதமர் பண்டித நேரு? இல்லையே!

உலக வரலாறு கற்று இருப்பவர்—அதுவும் மிக மிகத தெளிவாக.

அவரும், ஒரு உலக வரலாற்றை இயற்றியும் உள்ளார்.

மக்கள் உளநூல் பயின்றிருப்பவர்—இலநூலும் நன்கு தெரிந்திருப்பவர்.

எனவே அவர் கூறுகிறர், 'இந்திய' மக்களிடம் 'பிரிவினை' மனப்போக்கு இயல்பாக அமைந்திருக்கும் ஒன்றாகும் என்று. அதை மெய்ப்பிக்க இந்திய வரலாற்றையும் சான்றுகக் காட்டுகிறர் அப்பெருந்தகை.

இந்திய மக்களிடம் இயல்பாக இருந்துவரும் 'பிரிவினை' மனப்போக்கு, இன்று நேற்று ஏற்பட்டிருப்பதன்று-தொனறு தொட்டு வைரம் பாய்ந்து போயிருக்கும் ஒன்றாகும் அதுஎன்று, அழுததம திருததமாக, வரலாற்றின் துணையுடன் தீட்டிக் காட்டி இருக்கிறர் பண்டிதர் நேரு.

இந்திய மக்களிடம் இயல்பா இருந்துவரும் 'பிரிவினை' மனப்போககை அகறறும முயறசியில் முதல் முதலாக ஈடுபட்டு வெற்றி பெற்றவர் அவர் என்பதையும வரலாற்றின் துணைகொண்டு முடிவு கட்டியுள்ளார் பண்டிதர்.

இந்திய மக்களிடம இயல்பாக இருந்துவரும் 'பிரிவினை' மனப்போககை அகற்றும முயற்சியில், முதல் முதலாக ஈடுபட முன்வந்தது ஆங்கிலேய ஆட்சியினரேயாவர் எனப் பண்டிதர் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் துறையில் ஆங்கிலேயர் உருவாக்கிய 'ஏக இந்தியா' அமைப்பைத்தான் இத்தொடர்பில் குறிப்பிடுகிறர் எனக் கொள்வதைத் தவிர்த்து, அவர் கருத்துரைக்கு வேறு பொருள் கொள்ளுவதற்கில்லை

அந்த 'ஏக இந்தியா' அமைப்பைக் காண ஆங்கிலேய ஆட்சியினர் மட்டுமே முதன் முதலாக முயலவில்லை. அக்பரும அசோகனும், ஆங்கிலேயர்களுக்கு முன்பே, அத்தகு அரசியல் இணைப்பைக் காண முயற்சிக்கத்தான் செய்தனர்.

ஆனல், அம்முயற்சியில் அசோகனும் அக்பரும் வெற்றி காணத் தவறிவிட்டனர்; முழுத் தோல்வி காணவேண்டியவர்களாயினர்.

அசோகனும் அக்பரும், அத்துறையில் தோற்று இருக்க, ஆங்கிலேயத் துரைத்தனத்தார் மட்டுமே வெற்றி பெற்றிருக்கின்றனர் என்ற வரலாற்றில் உள்ளடங்கிக் கிடக்கும் உண்மையை, மற்ற காங்கிரசுத் தலைவர்களைப் போன்றே, உலக வரலாறு உட்பட பல கலையும் கற்றுத் தேர்ந்துள்ள இந்தியப் பிரதமரும் காணத் தவறுகிறர்—காண மறுக்கிறர்.

இந்திய மக்களிடம் இருந்து வரும 'பிரிவினை' இயல்பை அகற்ற ஆங்கிலேய ஆட்சியினர் எடுத்துக்கொண்ட முதல் முயற்சியை, விரிவுடையதாகவும் பலனுள்ளதாகவும செய்தவர் காந்தியாரேயாகும் என்று பண்டிதர் குறிப்பிடுவது முழுவதும உண்மையேயாகும். ஆனல், அதன் பின்னர்?

இந்திய மக்களின் இரத்தத்தில் ஊறிப் போயிருககின்ற 'பிரிவினை' இயல்பு மீண்டும தலைதூக்கி விட்டதாகவும், மாநிலப் புனரமைப்பின்போது தலைவிரித்தாடினதாகவும் பண்டிதர் விளக்கிக் காட்டி, ஆயாசப்பட்டு இருக்கிறர்.

இப்பொழுதும், இந்திய மக்களின் இயல்பான 'பிரிவினை' மனப்போக்கு இருந்து வருவதாக, இந்தியப் பிரதமரே ஒப்புக்கொண்டுள்ளார். அதை ஒரேயடியாக ஒழித்துக் கட்டப் போவதாகவும் அவர் முழக்கமிட்டிருக்கிறர்.

அதற்காக, 'உணர்வு பூர்வ' மாக இந்திய ஒற்றுமையை ஆக்கப் போவதாகவும அவர், தமது ஆவலை வெளிப்படுத்தியுள்ளார்.

வரலாற்றுத் தொடர்புடன் கூடிய இந்திய மக்களிடம இயல்பாக இருந்துவரும் 'பிரிவினை' மனப்பாக்கு இந்திய மக்களிடம ஏன் ஏற்பட்டது? ஏற்பட்டதற்குரிய நியாயமான காரணங்கள் என்ன?

ஆங்கில ஆட்சியினர் முதல் முயற்சியும, காநதியாரின விரிவான நடவடிக்கையும், இந்தியப் பிரதமர் நேருவின் உறுதியான செயல்முறையும, இந்திய மக்களிடம் இயல்பாக இருந்துவரும் அப்பிரிவினை மனப்போக்கை நிரந்தரமாக மாற்றி அமைக்க இயலாது தோல்வியடைவது ஏன் என்ற நியாயமான கேள்வி எழுகிறது.

இந்த நியாயமான கேள்வி இந்திய மக்கள் என்ற ஒரு தனி மக்கள் கூட்டம், இந்திய வரலாற்றில் என்றுவது இடம் பெற்றிருந்ததா என்ற மற்றொரு நியாயமான கேள்வியைக் கேட்பதில் கொண்டு போய் நம்மை விடுகிறது.

இதற்குக் கிடைக்கக்கூடிய விடையை நேரு பண்டிதர் ஒப்புக்கொள்வாரானல், காந்தியார் அவர்களே தோற்றுப் போன ஒரு முயற்சியை மீண்டும் தாம் மேற்கொள்ளுவதினல் நல்ல பலன் ஏற்படாது என்ற முடிவிற்கு அவரே வந்து விடுவார்.

ஆனல் நேரு பண்டிதரோ, அசோகன்போல் — அக்பர் போல்—ஆங்கில ஏகாதிபத்தியம்போல் ஒரு பெரும் பேரரசைக் காண வேண்டும் என்று கனவு கண்டுகொண்டு இருக்கும்பொழுது, அவரிடம் நாம் நியாயமான அரசியல் அறிவுடைமையை எதிர்பார்ப்பது எப்படி முடியும்?

இந்தியப் பிரதமர் கூறி இருப்பதுபோல் இந்தியா, இந்திய மக்கள் என்ற கருத்து, இந்தியத் துணைக்கண்ட மக்களிடம் என்றும இருந்ததில்லை— இனி ஏற்படவும் போவதில்லை. இந்த மகத்தான உண்மையைத்தான், நேரு காலத்தின் சம்பவங்கள் ஒவ்வொன்றும் நமக்கு எடுத்துக் கூறுவனவாக உள்ளன. சென்ற கால வரலாறும் இப்பேருண்மையைத்தான் வலியுறுத்துகின்றன.

ஆங்கில ஆட்சியினர் முதல் முதலாகமுயற்சித்தனர், தோற்றனர். காந்தியார் முயன்றார் — வென்றார் — வெற்றி நீடிக்கவில்லை: சுக்கு நூறுகச் சிதறிவிட்டது. இந்தியப் பிரதமர் நேரு முயலுகிறர் —பிடிவாதமாகப் பேசுகிறர்— அவர் பெறப்போவது முழு வெற்றி அல்ல—அரைகுறை வெற்றியும்கூட அல்ல!

தம் வாழ்நாளிலேயே மாநிலப் புனரமைப்பின்போது தனது முயற்சி பொடிப்பொடியாகச் சிதறிப்போன அலங்கோலத்தைத் தம் கண்முன்பாகவே நேரு பெருமகன் கண்டார். அலங்கோலத்தைக் கண்டாரே ஒழிய, அது கூறும் பாடத்தை அவர் காண மறுக்கிறர்—அல்லது தவறிவிட்டார் என்பதைத்தான், அவருடைய சென்னைப் பேச்சு விளக்கிக் காட்டுகிறது.

வரலாறு திரும்பும் என்ற இயற்கை விதியின் துவக்கம் தான், மாநிலப் புனரமைப்பில் அவர் காண நேர்ந்த வெறிச் செயல்கள் அனைத்தும்.

நிலவைப் பிடித்து விளையாடவேண்டும் எனப் பிடிவாதமாக அழுது கொண்டிருக்கும் குழந்தைபோல், என்றென்றும் காணமுடியாத 'இந்திய மக்கள்' இனத்தைக் காண இந்தியப் பிரதமர் பிடிவாதம் பேசுவதும் அமைந்திருக்கிறது.

புதுவை மாநிலத்தில் சிமெண்டு ஆலைகள்

புதுவை மாநிலத்தில 2 சாக்கரை ஆலைகளும், 2 சிமெண்டு உற்பத்தி ஆலைகளும நிறுவுவதற்கு மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை சர்க்கார் ஊழியர் கோரிக்கைகள்

பண்டிதரைச் சந்தித்து முறையீடு

சென்னை, பிப். 1—

"மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களில் பணியாற்றும் இருதரப்பு ஊழியர்களும் நாட்டு மக்களுக்காகவே பணியாற்றுகிறவர்கள்; எனவே, பொதுமக்களிடத்திலிருந்து வசூலிக்கப்படும்வரியிலிருந்து அரசாங்க ஊழியர்களுககுக் கொடுக்கப்படும் சம்பளத்தில், மாநில சர்க்கார் ஊழியர்—மத்திய சர்க்கார் ஊழியர் என்ற வேறுபாடு காட்டக்கூடாது. ஆனல், சரிசம வேலைக்குச் சரிசம ஊதியம் என்ற அடிப்படையிலேயே சர்க்கார் ஊழியர்கள் அனைவருக்கும் ஊதியம் தரப்பட வேண்டும்.

"மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் கிராக்கிப்படிக்கும், மாநில சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் கிராக்கிப்படிக்கும் பெரும் அளவில் ஏற்றத் தாழ்வு இருக்கிறது. இப்போதிருக்கிற வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்தவரையில், மாநில சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்பட்டுவரும தொகை, அவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய தொகையில் பாதி கூட இல்லை. இதனை எடுத்துக்காட்டி மாநில சர்க்காருக்கு நாங்கள் விண்ணப்பித்துக்கொண்டபோதெல்லாம், 'நிதி இல்லை' என்ற ஒரே ஒரு காரணத்தைக்கூறி, அவைகளை ஏற்க மறுத்துவிட்டனர் மாநில சர்க்கார். அண்மையில் கடந்த நவம்பர் திங்களில் என். ஜி. ஓ-க்களுக்குக் கிராக்கிப்படியில் உயர்த்தப்பட்ட 5 ரூபாய், என். ஜி. ஓ.-க்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் போதுமானதாக இருக்கவில்லை."

மேற்கண்ட கருத்துக்களடங்கிய குறிப்பொன்றை நேற்று, தமிழ் நாட்டில் காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கிவைக்க வந்த நேரு பண்டிதர் அவர்களைச் சந்தித்த சென்னை மாநில சர்க்கார் பதிவில்லாத ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகள் தந்திருக்கின்றனர்.

'மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்பட்டுவரும் ஊதியங்களின் அடிப்படையில் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் தர, சென்னை அரசாங்கத்திற்கு இந்திய சர்க்கார் மேலும் பண உதவி செய்து, அதன் மூலம் மத்திய— மாநில சர்க்கார் ஊழியர் சம்பள விகிதங்களில் உள்ள வேறுபாட்டைத் தவிர்க்க வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்தக் குழுவில், மாநில என்.ஜி.ஓ. சங்கச் சார்பில் சென்னை நகரத்தையும் மற்றும் பல மாவட்டங்களையும சேர்ந்த 42 பிரதிநிதிகளும், சென்னை சர்க்கார் தலைமை காரியாலய சங்கத் தலைவர் எஸ். இ. துரைராசன் மற்றும் 9 பேரும், சர்க்கார் கடைநிலை ஊழியர் சங்கத் தலைவர் டி. சீனிவாசனும் இடம் பெற்றிருக்கின்றனர்.

மேலும், இந்தக் குழுவினர் பிரதமர் நேருவிடம் தங்கள் குறிப்பினைத் தரும்போது, மத்திய சர்க்கார் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ண மாச்சாரியும், சென்னை முதலமைச்சர் காமராசரும், சென்னை சர்க்கார் நிதி இலாகா செயலாளர் டி. எ. வ. நிசும் நேருவுடன் இருந்திருக்கின்றனர்.

★

சென்னை சர்க்கார் தலைமைக் காரியாலய ஊழியர் கோரிக்கை

சென்னை மாநில என். ஜி. ஓ., சங்கத்தைத் தொடர்ந்து, சென்னை சர்க்கார் தலைமைக் காரியாலய ஊழியர் சங்கப் பிரதிநிதிகளும், நேரு பண்டிதரை அணுகி, தங்கள் குறைகளைவிளக்கிக் குறிப்பொன்று தந்திருக்கின்றனர்.

அவர்களும் அக்குறிப்பில், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படுவது போன்றே மாநில சர்க்கார் பதிவில்லாத ஊழியர்களுக்கும் கிராக்கிப் படி உடனடியாகத் தரப்பட வேண்டுமென வற்புறுத்தியிருக்கின்றனர். இந்த கிராககிப்படி உயர்வு இவ்வாண்டுத் துவக்க முதலே, அதாவது சனவரி மாதம் 1-ம் தேதி முதற்கொண்டே தரப்பட வேண்டும் என்றும், இது குறித்த அறிவிப்பொன்றை, சர்க்கார், வருகிற மார்ச் மாதம் 1-ம் தேதிக்குள் அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளனர். இதனல் சர்க்காருக்கு ஏற்படும் அதிகச் செலவை ஒரு குறிப்பிட்ட—நியாயமான விகிதத்தில் மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தங்கள் கருத்தினை அறிவித்துள்ளனர்.

பின்னர், நேரு பண்டிதர், இந்த வேண்டுகோள்கள் குறித்து, சிறிது நேர விவாதத்திற்குப் பின்னர், பிரதிநிதிகள் எழுப்பியுள்ள பிரச்சினைகளையெல்லாம் 'மிகுந்த பரிவுடன்' கவனிப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறாராம்.

0,000 தொழிலாளர்கட்கு மாலை வகுப்புகள்

வர்த்தக் கொள்கை, திட்டங்கள் பற்றிப் போதனையாம்

புதுடில்லி, சன 31—

முக்கியமான இடங்களில் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளருக்கு மாலை வகுப்புகள் நடத்த வகை செய்யும் திட்டம் ஒன்றை டில்லி சர்க்கார் தயாரித்திருக்கிறர்களாம்.

இது, தொழிலாளர்கள் தங்கள் எதிர்காலத்தை வளப்பமானதாக் கிகொள்ள ஊக்குவிப்பதாயிருக்குமாம்.

வர்த்தகக் கொள்கைகள், திட்டங்கள் முதலியன பற்றிக் கற்றுத் தரப்படுமாம்.

இதனல் சுமார் 10,000 தொழிலாளர் பயனடைவராம்.

எங்கே ?

இந்தத் திட்டம், மாநில சர்க்காரின் மேற்பார்வையில் பெங்களூர், பம்பாய், கல்கத்தா, கான்பூர் ஆகிய இடங்களில் துவக்கத்தில அமுல் செய்யப்படுமாம்.

'சிகரெட்' உபயோகம் அதிகரிக்கிறது!

புதுடில்லி, சன. 31—

உலகில் 'சிகரெட்' உபயோகம் நாளுக்கு நாள் பெருகி வருவதாக ஐ நா. உணவு, மற்றும் விவசாய நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

உதாரணமாக, அமெரிக்காவில் 1956-ம் வருடம் உபயோகிக்கப்பட்ட சிகரெட் அளவு, முந்திய ஆண்டைவிட மூன்று சதவிகிதம் அதிகம் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

உங்கள் குறிப்புக்கு!

சென்னை, சன. 30—

சென்னை அரசாங்க பஸ்போக்குவரத்து மூலம 1956 டிசம்பர் திங்களில் ரூ. 12,84,500 வருமானம் கிடைத்தது என்றும், சராசரி 320 பஸ்கள் ஓடியதாகவும், அரசாங்கத்திற்குச் சொந்தமாக இப்போது 450 பஸ்கள் இருப்பதாகவும் செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

புதுவை மேயருக்கு சிறைத் தண்டனை

நகரசபை பணமோசடி வழக்கில் தீர்ப்பு

புதுவை, சன. 31—

புதுவை நகரசபைத் தலைவர் லத்தூர் மீது, நகர சபைப் பணத்தை மோசடி செய்ததாக நடைபெற்ற மூன்ருவது வழக்கில் புதுவை நீதிபதி, லத்தூருக்கு 15 நாள் சிறைத் தண்டனை தந்து தீர்ப்பு வழங்கியிருக்கிருர்.

ஏற்கனவே நடைபெற்ற இரு வழக்குகளில், லத்தூருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை தரப்பட்டிருக்கிறது இந்தத் தீர்ப்புக்கு எதிராக லத்தூர் அப்பீல் செய்திருக்கிருர்.

உருட்டலும் மிரட்டலும்!

புதுடில்லி, சன 30—

"நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்து வேறு காங்கிரஸ்காரர்கள் நியமனப் பத்திரம் தாக்கல் செய்திருந்தால் உடனடியாக அவர்கள் வாபஸ் பெறவேண்டும்; இன்றேல், உடனடியாக அவர்களை 'சஸ்பெண்டு' செய்து, பின்னர் ஆறு ஆண்டுக் காலம் காங்கிரசில் உறுப்பினராக இருக்க முடியாதவாறு ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று, அ. இ கா. கமிட்டி எல்லா மாகிலக் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அறிவித்திருக்கிறதாம்.

******-*******-*********-**** ******-**

தேர்தல் பிரச்சாரப் பாடல்கள் :

விழித்தெழுவீர்!

★

(பிரேமபாசத்தால்.....என்ற இசை)

உதய சூரியன் உதிக்கிற தருணம்
உறங்காதே தமிழா நீயும் (உறங்காதே)

உந்தனின் நாட்டில் வடவர் ஆட்சியா?
உடனே விழித்து எழுந்திடுவாய்
சொந்த நாட்டிலே சுரண்டலை ஒழித்து
சுகமாய் வாழ எண்ணிடுவாய் (உதயசூரியன்)

மாடுகள் காட்டி ஓட்டு வாங்கியே
மந்திரி என்றே வந்தோர்கள்
விடுகள் தோறும் பஞ்சை வாழ்வையே
விட்டு வைத்துமே வாழ்கின்ருர் (உதயசூரியன்)

சட்டசபைதனில் வெட்டியாய் சம்பளம்
சாய்ந்தே வாங்கிய மெம்பர்களில்
வெட்டு ஒன்ருக துண்டு இரண்டாய்
விழிப்புடன் பேசிடத்தனிக் கட்சிபார் (உதயசூரியன்)

சிந்திய கண்ணீர்த்துளிகளை அண்ணு
செந்தமிழ்க் குளமாய் சேர்த்துவிட்டார்
சந்தர்ப்பத் தவளைகள் தாவிக் குதித்திடும்
சரியாய்க் காவல் செய்திடு வாய் (உதயசூரியன்)

திராவிடநாடு திராவிடர்க் கென்றே
திசை யெங்கும் ஒலிதனைப் பரப்பிடுவோம்
திராவிட நாட்டில் சமதர்மம் காண
தி. மு. கழகத்தில் சேர்ந்திடு வோம் (உதயசூரியன்)

—மு. நா. இராமசாமி, தளவாய்புரம்

*******-*************************

****-**********-****

தி. மு. கழக அபேட்சகர்கள் கவனத்திற்கு:

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் கொள்கைகளை விளக்கி, 9—2—57–ல், 'தேர்தல் கார்டூன்' மலராக வெளிவரும் 'தனி அரசி'ல், தி. மு. கழக அபேட்சகர்களின் புகைப்படங்களை வெளியிட வேண்டியதிருப்பதால், ஒவ்வொரு அபேட்சகரும் உடனே சிறிய புகைப்படம் ஒன்று அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

*********-****-****

சென்னை-வண்ணை தொகுதி தி. மு. க. தேர்தல் அலுவலகம்

சென்னை—வண்ணை தொகுதி தி. மு. கழகத் தேர்தல் நிலையம் வண்ணை கே. எஸ். பாண்டியன் நிலையம் (எண் 66, எம். சி. ரோடு) மேல் மாடியில் அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல் சம்பந்தமாகத் தொடர்புகொள்ள விரும்புவோர் நேரில் வருமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

10-இலட்சம் ஆரம்ப ஆசிரியர்கள் அதிருப்தி

நிலைமையை ஆராயக் குழு அமைக்கக் கோரிக்கை

ஆரம்ப ஆசிரியர்களின் வேலை நிலைகள் குறித்து ஆராய்ந்து சுமார் 10 இலட்சம் ஆரம்ப ஆசிரியரிடை நிலவும் அதிருப்தியைப் போக்குவதற்கு வழி செய்யும் சிபாரிசுகளைக் கூற ஒரு விசாரணைக் கமிஷனை நியமிக்குமாறு அகில இந்திய ஆரம்ப ஆசிரியா சங்கச் செயற்குழு இங்கு நடைபெற்ற கூட்டத்தில் கேற்று வற்புறுத்தியிருக்கிறது.

அன்பளிப்பு

திருமணம்:

25—1—57 காலை 9 மணிக்கு, சென்னை 18-வது வட்டம் புளியந்தோப்பு சுந்தரபுரத்தில் தோழர் சி. கே. வேணு—தோழியர் டி. எம். சசிலா திருமணம், தோழர் என். அப்பாதுரை தலைமையில் நடைபெற்றது தோழர்கள் கே. சிவஞானம், நாராயணசாமி, கே. சுப்பிரமணியம் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமணத்தினைவாக, 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

★

பிறப்பு

22—1—57ல், சென்னை 4-வது வட்டம் தி. மு. கழகத் தோழர் பி. கண்ணன் அவர்களது துணைவியார் பெண் மகவொன்றுக்குத் தாயானர். இது நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சி கருதி ரூ. 1 அன்பளிப்புத் தரப்பட்டது.

★

பெயர் சூட்டல்

பெங்களூர் - இலக்குமணபுரி தி. மு கழக சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில், தோழர் சந்திரன் அவர்களது ஆண் மகவுக்கு 'எழிலரசன்' எனப் பெயரிடப்பட்டது. இது நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சி கருதி ரூ 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

15—1—57ல் திண்டிவனம் இராம விலாசம் உணவு விடுதி உரிமையாளர் வே நடராசனுர் இல்லத்தில் தோழர் என் நடராசன் தலைமையில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில், திண்டிவனம் 'நம் நாடு' விற்பனையாளர் தோழர் மு. மாரிசாமி அவர்களது பெண் மகவுக்கு தோழர் வே. நடராசனுர் 'பூங்கோதை' எனப் பெயர் சூட்டினது நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது.

* * *

20—1—57ல் திருச்சி மாவட்டம் நகர் கிராமத்தில் தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கிளைக் கழகத் துவக்க விழாவில், தன்டாங்குளை தோழர் சேட் அவர்களது பெண் மகவுக்கு தோழர் அப்பாதுரை அவர்கள் 'செல்வ மணி' எனப் பெயர் சூட்டினது நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சி கருதி ரூ 1 அன்பளிப்பு தரப்பட்டது.

('நம் நாடு' அன்பளிப்புத் தொகைகள் அனைத்தும் வரப் பெற்ரேம்—நன்றி)

ஐதராபாத்தில் 'தமிழ் மன்றத்' தோற்றம்

ஐதராபாத்தைச் சேர்ந்த சிர்பூர் காகஸ் நகரில், தமிழ் மொழி வளர்ச்சி, தமிழர் முன்னேற்றம் ஆகியவைகளைக் குறிக்கோளாகக் கொண்டு, அப்பகுதித் தமிழ் மக்களால் 'தமிழ் மன்றம்' ஒன்று திறவப்பட்டிருக்கிறது.

ஆனந்த் டாக்கீசில், கடந்த 26-ந்தேதி நடைபெற்ற இம்மன்ற அமைப்புக் கூட்டத்திலேயே தோழர்கள் சி எஸ். ஜி. சாமி, தி அய்யாசாமி ஆகியோர் முறையே தலைவர், செயலாளராகவும், மற்றும் 20 பேர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ந. - தி.)

திருத்தம்

சென்னை 7—1—57 (வெளியீர் 8—1—57) 'நம் நாடு' இதழில் வெளிவந்த தி. மு. கழகத் தேர்தல் நிதிப் பட்டியலில், 'மேழகம்மகுறிச்சி—பி. சிதம்பர சபாபதி ரூ. 25' என்றிருப்பதை, 'மேழகம்மகுறிச்சி தி மு. கழகம் ரூ 25' என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிரேம். (ஆ - ர்)

'விடுதலையின் சின்ன'மாகத் திகழ்ந்த பிராங்கிலின் ரூஸ்வெல்ட் நினைவு நாள்

'பொருளாதாரக் கோளாறு'களை எதிர்த்துப் போராடிய வரலாற்றுக் குறிப்புகள்

ஐரோப்பாவில் ஜெர்மானிய காட்டுமிராண்டித்தனத்திலும் ஆசியாவில் ஜப்பானிய காட்டுமிராண்டித்தனத்திலும் நசுக்குண்ட மக்களுக்கு விடுதலையின் சின்னமாக பிராங்கிலின் டி ரூஸ்வெல்ட் திகழ்ந்தார். காலனி மக்களின் விடுதலையை ஆதரித்தவர் என்ற பிரசித்தியையும் பெற்றவர் அவர்; அவருடைய பிறந்த தினமான ஜனவரி 30 நினைவுக்குரியதாகும்.

மற்றெந்த அமெரிக்கரையும்விட இவர்தான் சமூகால சம்பந்தமான அநேகச் சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றவும் செய்தார் அமெரிக்காவில் மிகக் கடுமையான பொருளாதார மந்தம் இருந்து வந்த காலத்தில், 'நாம் பயப்பட வேண்டிய ஒரே விஷயம் பயம் ஒன்றுதான்' என்று அமெரிக்காவிடம் சொன்னவரும் இவரே!

32-வது அமெரிக்க ஜனாதிபதியான ரூஸ்வெல்ட்தான், முதன் முதலாக நான்கு தடவை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இது அநேகமாகக் கடைசியாகவும் இருக்கக்கூடும்.

சராசரி பாமர மனிதனின் நன்மைக்காகச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதில் உலகின் முன்னணித் தலைவராக விளங்கிய அவர், 1910ல், 30 வயதுகூட நிரம்புவதற்குமுன் நியூயார்க் செனட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1912-ல் உட்ரோ வில்சன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் ரூஸ்வெல்டை கடற்படை உதவி காரியதரிசியாக நியமனம் செய்தார்.

1921-ல் அவர் விடுமுறையில் இருக்கையில், பட்சவாதத்தால் வேதனையுற்ருர்; இரண்டு கால்களின் பயனை ஓரளவுக்கு இழந்துவிட்டார்.

நியூயார்க் கவர்னராக இருக்கையில், அவர் 1932-ல் ஜனநாயகக் கட்சியால் ஜனாதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார். தேசத்தின் செல்வ நிலைமை படுமோசமாக இருந்த அந்தச் சமயத்தில் அவர், 'புது முறை பொருளாதார-அரசியல்' ஒன்றை அளிப்பதாக வாக்களித்ததும், 48 மாநிலங்களில் 42 மாநிலங்கள் பெரும்பான்மையாக அவரைத் தேர்ந்தெடுத்தன தொடர்ந்து துணிச்சலான சில நடவடிக்கைகளின் மூலம் அவர் பொருளாதாரக் கோளாறுகளை எதிர்த்துப் போராடினர்.

1941-ல் அவர் தேசிய நெருக்கடி நிலைமையொன்றைப் பிரகடனம் செய்தார். தற்காப்பிற்காக அவர் ஏராளமான கைத்தொழில்களை நிர்மாணம் செய்ய ஆரம்பித்தார்

எந்த வெற்றியைக் காண அவர் மிகக் கடுமையாக உழைத்தாரோ அதைக் காணுமலேயே அவர் மறைந்துவிட்டார். ஐக்கிய நாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டதையும் அவர் பார்க்கவில்லை. இதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சி சாமானியமானதல்ல!

மூளையில் இரத்தக் கசிவினுல் அவர் ஜியார்ஜியாவில் 1954 எப்ரல் 12-ந் தேதி காலமானுர்; அவர் அங்கு ஓய்வுக்குச் சென்றிருந்தார்.

நெல் கொள்முதல் திட்டம்

டில்லி கைவிடுகிறது

புதுடில்லி, சன. 31—

ஏற்கனவே கருதியபடி, இந்த அறுவடைக் காலத்தின்போது நெல் கொள்முதல் செய்வதில்லை என்றும், அதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளை ரத்துசெய்துவிடுவதென்றும் டில்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிருர்களாம்.

சர்க்கார் கொள்முதல் செய்வதினுல் நெல் விலை பாதிக்கப்படுமோ என்று அஞ்சுவதே இந்த முடிவுக்குக் காரணமாம்.

இந்த முடிவை மேற்கொள்ளுமுன் தொடர்புடைய மாநில சர்க்கார்களின் ஆலோசனை கேட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

விசேட போலீஸ் அதிகாரி

சென்னை போலீஸ் உதவி கமிஷனர் பி. பரமகுரு, இன்றுமுதல் $1\frac{1}{2}$ மாத காலம்வரை தேர்தல் சம்பந்தமாக விசேட அலுவல்களை கவனித்துக்கொள்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

*******-**-*****************-********

தி. மு. க.—தேர்தல் பிரச்சார

சிறப்பு மாநாடு

சென்னை-எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

10—2—57 ஞாயிறன்று நடைபெறும்

*

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமை தாங்குவார்.

*

★ நாட்டுக்கு நல்லாட்சி
★ சர்வாதிகாரத்தின் எதிர்காலம்
★ காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்கள்
★ தி. மு. கழகமும் பொதுமக்களும்
★ தேர்தல் பிரச்சார முறைகளும் தன்மையும்

என்பதைப்பற்றி

அண்ணு

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி	சி. பி. சிற்றரசு
கே. ஏ. மதியழகன்	சத்தியவாணிமுத்து
க. அன்பழகன்	காஞ்சி—கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	நாஞ்சில் மனோகரன்

ஆகியோரின் விளக்க உரைகள்

இரவு 10-மணிக்கு--நாடகம் உண்டு

மற்ற விவரங்கள் அடுத்து அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

சென்னை நகரில் வாடகை மோட்டார் தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஒரு டிரைவர் கைது செய்யப்பட்டதின் எதிரொலி

சென்னை, பிப். 1— சுமார் 100 வாடகை மோட்டார், 50 ஆட்டோ-ரிக்ஷா டிரைவர்கள் இன்று பகல் சுமார் 6 மணி நேரம் வேலை நிறுத்தம் செய்தனர்.

சந்திரசேகரன் என்ற வாடகை மோட்டார் ஓட்டியை, புதன் கிழமையன்று போலீசார் அடித்துத் துன்புறுத்தி கைது செய்ததாகவும், அதனைக் கண்டிப்பதற்காகவே எல்லாத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

உள்நாட்டிலாகா செயலாளர் லோபோ பிரபுவைச் சந்தித்த பின்னர், மாலையில்தான் தொழிலாளர்கள் வண்டி எடுத்தனர்.

பிப்ரவரி 2-ம் தேதியன்று தொழிலாளர்கள், போலீஸ் கமிஷனரையும் இது விவகாரமாகச் சந்திப்பர் என்றும் தெரியவருகிறது.

தொகுதிக் குழுக் கூட்டங்கள்

★

சென்னை—வண்ணாரப்பேட்டை

4—2—57 இரவு 8 மணிக்கு இராயபுரம் 'அறிவகத்'தில், வண்ணாரப்பேட்டை தொகுதி—(1, 2, 3, 4-வது வட்டங்கள்) தி. மு. கழகக் கிளைகள், மன்றங்களைச் சார்ந்த தோழர்களடங்கிய தொகுதிக் குழுக் கூட்டம் நடைபெறும். துணை பொதுச்செயலாளர் என். வி. நடராசன், மாவட்டத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் கலந்துகொள்வர்.

சென்னை—எழும்பூர்

5—2—57 இரவு 8 மணிக்கு புரசைவாக்கம் தோழர் க. அன்பழகன் இல்லத்தில் (10 வேளாளர் தெரு) எழும்பூர் தொகுதி—(25, 26, 28, 29, 30, 31, 32-வது வட்டங்கள்) தி. மு. கழகக் கிளைகள், மன்றங்களைச் சார்ந்த தோழர்களடங்கிய தொகுதிக்குழு கூட்டம் நடைபெறும். துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், மாவட்டத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் கலந்துகொள்வர்.

தேர்தல் ஊர்வலம்

★

சென்னை—வண்ணை:

3—2—57 மாலை 3 மணிக்கு வண்ணை—தொகுதி தி. மு. கழகத் தேர்தல் மத்திய நிலையத்திலிருந்து, தொகுதி அபேட்சகர் தோழர் என். சிவராஜ் அவர்களை ஆதரித்து தோழர் எஸ். கே. வீரமணி தலைமையில் தேர்தல் ஊர்வலம் தொகுதி முழுமையிலும் நடைபெற்று, 3-வது வட்டம் பழைய ஆட்டுத்தொட்டியில் நடைபெற இருக்கும் கே. வி. கே. சாமி நினைவு மன்றத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளும்.

ஊர்வலத்தில் கழகக் கொடிகளுடன், 1, 2, 3, 4-வது வட்ட தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள் படிப்பகங்கள் கலந்து கொள்ளுமாறு, வண்ணை தொகுதி தி. மு. க. தேர்தல் நிலையப் பொறுப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

சென்னை 48-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

3—2—57 இரவு 7 மணிக்கு சென்னை—சைதை (48-வது வட்டம்) கிளைக் கழகப் பணிமனையில் கிளைச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். தேர்தல் பணி குறித்து ஆலோசிக்கப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

3—2—57 மாலை, சென்னை 12-வது வட்டம் ஆர்பர் தி. மு. கழக இல்லத்தில் (எண் 5/22 மரக்காயர் லெப்பைத் தெரு) தோழர் பாஸ்யம் தலைமையில் தோழர்கள் தன்ராசு, தர்மலிங்கம், தமிழ்மகன் ஆகியோர் 'முத்தமிழ்' எனும் பொருள் குறித்துப் பேசுவர்.

சென்னை—வண்ணைத் தொகுதி தோழர்கட்கு:

"3—2—57 காலை 7-மணிக்கு, வண்ணைத் தொகுதி தி. மு. கழகத் தேர்தல் மத்திய அலுவலகத்தில் (எண் 66, எம். சி. ரோட்) ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். சென்னை 1, 2, 3, 4-வதுவட்டத் தி. மு. கழகக் கிளைகள், மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்களனைவரும் தவறாது வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று தோழர் என். ஜீவரத்தினம் அறிவிக்கிறார்.

தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புக் கூட்டம்

4—2—57 மாலை 6-மணிக்கு, சென்னை 16-வது வட்டத் தி. மு. கழகச் சார்பில், அண்ணா பிள்ளை தெரு திடலில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம், தோழர் ஜே. டி. பாண்டியன் தலைமையில் நடைபெறும். துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் டி. கே. சீனிவாசன் ஆகியோர் 'தேர்தலும் தி. மு. கழகமும்' என்பது குறித்துப் பேசுவர்.

சென்னையில் தி.மு.க. தேர்தல்நிதி

சிறப்புக் கூட்டம்

3—2—57 காலை 9-மணிக்கு, சென்னை 8-வதுவட்ட தி.மு. கழகச் சார்பில், மெமோரியல் மண்டபத்தில், தோழர் ஏ. எஸ். வேணு தலைமையில், தி. மு. கழகத் தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் க. அன்பழகன், டி. கே. சீனிவாசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

மறைந்த இசைப் பெரும் புலவர்

டி. என். இராசரத்தினம்

குடும்பத்தாருக்கு நிதி உதவி

3—2—57 காலை 9-மணியளவில், சென்னை-மைலாப்பூர் சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில், காலஞ்சென்ற இசைப் பெரும் புலவர் டி. என். இராசரத்தினம் அவர்களது குடும்பத்திற்கு நிதி திரட்டி அளிப்பது குறித்து ஆலோசனை செய்யவும், அதற்கான திட்டங்களை வகுக்கவும், ஒரு கூட்டம் நடைபெறும். அனைவரும் கலந்து கொள்ளுமாறு, மேற்படி நிதி உதவிக்குழு கன்வீனர்களான தோழர் எம். ஜி. இராமச்சந்திரன், தோழர் டி. ஏ. மதுரம் கேட்டுக் கொள்கின்றனர்.

வேண்டுகோள்

"எனக்குக் கடிதங்கள் எழுதுவோர், 'தி. மு. கழகத் தேர்தல் தலைமை அலுவலகம், எண் 80, நாகேசுவரன் கோயில் வடக்கு வீதி, குடந்தை' என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிறேன்" என்று தோழர் கே. கே. நீலமேகம் அறிவிக்கிறார்.

காஞ்சியில் பொதுக்கூட்டம்

★

அண்ணா

பேசுவார்

காஞ்சீபுரம் கீழண்டை இராசவீதியில், சண்முகம் நினைவு மன்றம் சார்பில், 3—2—57 ஞாயிறன்று ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

அண்ணா அவர்களும், தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் பேசுவர்.

கழகக் கூட்டங்கள்

★

பாப்பனப்பட்டு:

5—2—57 மாலை 4 மணிக்கு

தலைவர்: எம். சண்முகம்

பேசுவோர்:

ஏ. கோவிந்தசாமி
அருண்மொழி
ஏ. கே. வில்வம்
சிவ. ஔவைதாசன்

★

சென்னை—5-வதுவட்டம்:

கோருக்குப்பேட்டை

மண்ணப்ப முதலி தெருவில் (கிருஷ்ணசாமி முதலியார் மனை)

4—2—57 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: இரா. நலங்கிள்ளி

பேசுவோர்:

என். வி. நடராசன்
டி. கே. சீனிவாசன்
வி. எஸ். கோவிந்தராசன்
சி. ஆர். பாலசுந்தரம்
மாணவி சற்குணம்

சென்னை கே. வி. கே. சாமி நினைவுமன்றத் திறப்புவிழா

3—2—57 மாலை 6-மணிக்கு சென்னை 3-வதுவட்டம் பழைய ஆட்டுத்தொட்டி முத்துமாரியம்மன் கோயில் தெருவில், தோழர் பி. சண்முகம் தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு மன்றத் திறப்புவிழா நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், என். சிவராஜ், பி. எம். கருணாகரன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

சென்னை மறைமலை அடிகள் நாடக மன்ற நூல் நிலைய ஆண்டு விழா

3—2—57 மாலை 6 மணிக்கு சென்னை—இராயபுரம், மண்ணூர் சாமிகோயில் தெரு எண் 40, மறைமலை அடிகள் நாடக மன்ற நூல் நிலையத்தின் 5-வது ஆண்டு விழாவும் பொங்கல் விழாவும், திரு மி. பொன். இராமநாதனார் தலைமையில் நடைபெறும். தோழர்கள் நன்னன், ஏ. கே. வில்வம், சுரதா, தோழியர் தாமரைச் செல்வி ஆகியோர் பேசுவர்.

தீவிர கரேன்களுடன் கம்யூனிஸ்டுகள் கூட்டு!

ஆயுதந்தாங்கி திடீர் தாக்குதலில் ஈடுபட்டனர்

இரங்கூன், ஜன. 30— சிறிது நாளாக கரேன்களின் கிளர்ச்சி குறித்துத் தகவல் எதும் கிடைக்காமலிருந்தது. இன்று, கரேன்களில் சில தீவிரவாதிகளும் கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து, இங்கிருந்து 30 மைல் தொலைவிலுள்ள பெகு ஜனுபிட்டுவில் திடீர்த் தாக்குதல் நடத்தி 15 பேர்களைக் கொன்றுவிட்டனர் என்று செய்தி தரப்படுகிறது.

இந்த ஆயுதந் தரித்த கிளர்ச்சிக்காரர்கள், தங்கள் தாக்குதல் இலக்காகப் போலீஸ் நிலையத்தையும் இரயில்வே நிலையத்தையும் கொண்டதால், நிலைய அதிகாரி, மற்றும் பல போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

நன்கு திட்டமிட்ட வகையில் இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் பல பிரிவினராகப் பிரிந்து நின்று தாக்குதலை நடத்தி, 'வெற்றி' யோடு திரும்பிவிட்டனராம்.

கிளர்ச்சிக்காரர்கள் திரும்புவதற்கு முன்னால், 'மக்களுக்கு ஒரு வேண்டுகோள்' என்று ஒரு நோட்டீசை வீசிவிட்டுச் சென்றனராம்.

அதில், 'இன்று பலர் கொல்லப்பட்டனர் என்பதற்காக வருந்துகிறோம்; மக்களே! அமைதிக்காகப் பாடுபடுங்கள்!' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

கடந்த ஒரு வார காலமாகவே கரேன்கள், பல இடங்களில் பர்மிய இராணுவத்தினரிடமும் போலீசாரிடமும் மோதிக்கொண்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

சென்னை மின்சாரத் தொழிலாளர்கட்கு:

வேண்டுகோள்

10—2—57-ல் நடைபெறும் தி. மு. கழகச் சிறப்பு மாநாட்டின்போது, சென்னை மின்சாரத் தொழிலாளர்கள் சார்பில் தேர்தல் நிதி அளிக்கவேண்டியிருப்பதால், 7—2—57-க்குள் தேர்தல் நிதி வசூலிக்கும் தோழர்கள் தாங்கள் வசூலித்த தொகையைச் செலுத்திவிடுமாறு, மேற்படி தொழிலாளர் தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர்.

இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கை

பண்டிதர் விடும் சவால்!

"பம்பாய் நகரத்தில் பல மாநிலங்களைச்சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கையை அந்த நகரத்தில் ஓட்டெடுப்பு மூலமாக மக்கள் தீர்ப்புக்கு எதிர்பார்க்கிறோம். இந்திய அரசாங்கத்தின் அயல் நாட்டுக் கொள்கையை ஒப்புக் கொள்ளாதவர்களுக்கு இது ஒரு சவாலாகும்" என்று பண்டித நேரு, சென்னை ஐலண்டு மைதானத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

நகர அபிவிருத்திக்கு:

'கேட்டதோ ரூ. 13 கோடி; கிடைத்ததோ ரூ. 5 கோடி'

'நாங்கள் ஏமாற்றப்பட்டோம்'

நேரு பண்டிதரிடம் சென்னை மேயர் முறையீடு

"சென்னை நகரை ஒரு மாநிலத்தின் தலைநகராக மட்டும் கருதி, அதன் நல அபிவிருத்திக்கு மாநில சர்க்காரே பொறுப்பென்று மத்திய சர்க்கார் நினைக்கக்கூடாது. சென்னை நகரம் இன்று தேசிய — சர்வதேசிய சிறப்புப் பெற்று, மத்திய சர்க்காரின் உதவியைப் பெறத்தகுதி புள்ளதாகிவிட்டது.

"ஆடம்பரமான திட்டங்களை சென்னை நகரசபை வகுக்கவில்லை; ஆனால், நகரை எழில் மிகுந்த நகராகச் செய்வதற்கு அவசியமான திட்டங்களையே வகுத்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் இலட்சிய வெற்றி நிதி உதவியைப் பொறுத்திருக்கிறது. நகரசபையின் தற்போதைய வருடாந்திர வருமானம் ரூ. 3 கோடி யாகும்; தேவையைவிட இது மிகவும் குறைவாகும்.

"சென்ற ஆண்டில் திட்டக் குழுவின் துணைத் தலைவர் சென்னைக்கு வந்திருந்த போது, அவரிடம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 12,29,25,000 செலவில் நகரின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக நகரசபை வகுத்திருந்த நகல் விண்ணப்பத்தைத் தந்து நிதிஉதவி கோரினோம்; ஆனால், சென்னை நகர அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ. 4,93,00,000 இலட்சமே ஒதுக்கப் பட்டிருப்பதாக சர்க்காரிடமிருந்து தகவல் கிடைத்திருக்கிறது; இது, எங்களுக்குப் பெரியதோர் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது,"

என்று, சென்னை மேயர் அவர்கள், பண்டித நேருவிடம் சென்னையில் சமர்ப்பித்த விண்ணப்பமொன்றில் குறிப்பிட்டிருப்பதுடன், நகரசபையின் அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டக்குழு அனுதாபத்துடன் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சாகும் வரையில்!

'நவசீவன்' அச்சகத் தொழிலாளர் உண்ணாவிரதம்

ஆமதாபாத், பிப். 2— ஆமதாபாத்தில் உள்ள 'நவசீவன்' அச்சகத்திலிருந்து வேலை நீக்கப்பட்ட 3 தொழிலாளர்கள், அலுவலக வாயிலில் 'சாகும்வரை' உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்; அச்சக நிர்வாகத்தினர் ஆட்குறைப்பு செய்ததைக் கண்டித்தே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

'நவசீவன்' அச்சகம் காந்தியாரால் ஆரம்பிக்கப்பட்டதென்பது நினைவிற்குரியதாகும்.

பம்பாய் அரசாங்கம் தொடர்ந்த வழக்கு

உயர்நீதி மன்றத்திலும் தள்ளுபடி

பம்பாய், ஜன. 29— மகா குஜராத் கிளர்ச்சியின் போது ஊரடங்குச் சட்டத்தை மீறியதாக மக்கள் சோஷலிஸ்டுத் தலைவர்களான அமுல் தேசாய் ஜிகேந்திர மேதா ஆகியோர் மீது பம்பாய் அரசாங்கத்தால் தொடரப்பட்ட வழக்கு கீழ்க் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்தத் தீர்ப்பை ஏற்காமல் பம்பாய் அரசாங்கம் உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தது. அப்பீலை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

சங்கக் கட்டிடத்திற்கு 'சீல்' வைக்கப்பட்டதாம்

28 தொழிலாளர்கள் கைது

கோவை, பிப். 2— இந்தியக் குடியரசு தினத்தன்று வால்பாறை தோட்டத் தொழிலாளர்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொடர்ந்து, சங்கத் தலைவர், மற்றும் 27 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சங்கக் கட்டிடத்தையும் போலீசார் பூட்டி 'சீல்' வைத்துள்ளனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.